தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1972 ஏப்ரல் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Cash awards to Police officers

* 813 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that large number of cash awards have been paid to the Police staff in the State in September 1971;

(b) if so, the details thereof; and

(c) the basis on which these selections have been made?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) முதல் (உ) வரை பேரவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸ், டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் அண்டு ஆண்டி-கரப்ஷன், டைரக்டர் ஆஃப் ஃபையர் சர்வீஸஸ், ரிஜிஸ்ட்ரார் ஆஃப் ஹைகோர்ட், சென்னை, ஆகியோர் கமிட்டியாகச் செயல்பட்டு பரிசுக்குரியர்களைப்பற்றி பரிந்துரை செய்கிறார்களா? அல்லது, ஒவ்வொருவரும் பரிந்துரை செய்து அதன் அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படுகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒவ்வொரு ரேஞ்சிலிருந்தும் இது போன்ற பரிந்துரைகள் அவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அவர்கள் அனைவரும் அமர்ந்து அதிகாரிகளுக்குப் பரிசு வழங்குவது குறித்துப் பரிந்துரையை அரசுக்கு அதற்குப் பிறகு அரசு ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்கிறது.

திரு. என். கிட்டப்பா: இம்மாதிரி வீரச் செயல்கள் புரிகின்ற காவல் துறையினருக்கு ரொக்கப் பரிசுகள் வழங்குவதற்குப் பதிலாக ஓரளவு அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதுபற்றி அரசு ஆலோசிக்க முன்வருமா?

@ 108—114ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது அந்த உத்தேசம் இல்லை.

DR. H. V. HANDE : Sir, during the last three or four years when there were fires in the slum areas, many of the police officers and constables had shown daring bravery in trying to save so many persons. May I know whether any consideration is given to the persons who rescued those persons from the slum fires?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மொத்தமாக அத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் அனைவருடைய கணக்கையும் எடுத்துப் பார்த்து, அதிலிருந்துதான் இவர்களெல்லாம் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி ரொக்கப் பரிசுகள் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் என்று மூன்று ரகமாகக் கொடுக்கப்படுகின்றன. இம்மாதிரியாக தொகை நிச்சயம் பண்ணுவது எந்த அடிப்படையில் என்பதையும், இந்த ஃபையர் சர்வீசிலே இருப்பவர்களில் யாரும் இந்தப் பட்டியலில் இடம் பெறவில்லையே, அதற்கு என்ன காரணம் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவர்கள் ஓராண்டில் இடம் பெறவில்லை என்றால் அடுத்த ஆண்டில் இடம் பெறக்கூடும். மேலும், அதுபோன்ற செயலில் அவர்கள் ஈடுபடாதவர்களாக இருந்திருக்கக்கூடும். தீயணைப்பு அதிகாரிகளும் இதிலே இருந்துதான் அந்தப் பரிந்துரையை வழங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எந்தப் பாரபட்சமும் காட்டப்படமாட்டாது. தலைசிறந்த பணிக்காக, காவலர்கள், தலைமைக் காவலர்கள், முன்னணித் தீ அணைப்பவர்கள், இயந்திர பம்மியர்-வலவர்கள், மற்ற இணையான பதவிகளில் உள்ளவர்களுக்கு ஆயிரம் ரூபாய் என்ற அளவிலும், சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், நிலைய அதிகாரிகள், கோட்ட தீ அணைப்பு உதவி அதிகாரிகள், அதற்கு இணையான பிற பதவிகளில் உள்ளவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்ற அளவிலும், முதல், இரண்டு, மூன்றாம் நிலை டெபுடி சூபரின்டென்ட், முதல், இரண்டாம் நிலை கோட்ட தீயணைப்பு அதிகாரிகள் ஆகியோருக்கு மூவாயிரம் ரூபாய் என்ற அளவிலும், வீரச் செயல் புரிந்து, பதவித் தரம் எதுவாக இருந்தாலும், அவர்களுக்கு மூவாயிரம் ரூபாய் என்ற அளவிலும் விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: இப்படி திறமைசாலிகளாகத் தென்படுகிற காவலர்கள், காவல் அதிகாரிகள் ஆகியோரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து நல்ல பயிற்சி பெற்றவர்களாக செய்தால், அவர்களுடைய செயல்முறை இன்னும் சிறப்பாக இங்கே பயன்படுவதற்கு ஏதுவாக இருக்குமாதலால் அரசு அத்தகைய முயற்சியில் ஈடுபடுமா?

1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தப் பரிசு பெறுபவர்களைப் பிரத்தியேகமாக வெளிநாட்டுக்கு அனுப்புகிற திட்டம் எதுவும் இல்லை.

காவல் நிலையங்களுக்கு தொலைபேசிகள்.

* 814 வினு—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

காவல் நிலையங்கள் அனைத்திலும் டெலிபோன் வசதியளிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

திரு. பி. எஸ். மணியன்: 15 மைல், 20 மைல் தூரத்திற்கு ஒவ்வொரு காவல் நிலையத்தினுடைய எல்லையும் விரிவாக இருக்கிறது. குற்றங்கள் நடைபெறுகிற நேரத்தில் உடனடியாகத் தொடர்புகொள்ள முடிவதில்லை. ஆகவே, உடனடியாக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் இந்த ஆண்டே தொலைபேசி வசதி செய்ய அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே 816 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் கிட்டத்தட்ட 450-க்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு இந்தத் தொலைபேசி தொடர்பு இருக்கிறது. அவுட்-போஸ்ட் என்ற அளவில்கூட 175 இடங்களில் 15 அவுட்-போஸ்ட்களுக்கு இந்தத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் கூறிய இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துத்தான் எல்லா காவல் நிலையங்களுக்குத் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்துவதற்கு அரசு இன்றைய தினம் செயற்குறிப்பை ஆராய்ந்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லாக் காவல் நிலையங்களுக்கும் டெலிபோன் பெஸிலிடி செய்து கொடுப்பதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் ஆகும் என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எத்தனை மாதங்கள் ஆகும் என்று குறிப்பாகச் சொல்ல முடியாது. விரைவில் அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சு. துரைசாமி: இந்தக் காவல் நிலையங்களில் டெலிபோன் அமைக்கும்போது, நகரங்களிலிருக்கும் காவல் நிலையங்களுக்கு முதலில் அமைக்கப்படுமா? அப்படியானுல் திருப்பூரில் அப்படிப்பட்ட இடங்களில் விரைவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?